


இமாம் அயாதுல்லா ருஹொல்லா மூசாவி கொமேனி என்கிற கொமேனியை, நமக்கெல்லாம் கொஞ்சம் நன்றாகவே தெரியும். ஞாபக பீரோவைக் கொஞ்சம் தூசு தட்டிப் பார்த்தீர்களானால், சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்த மகானுபாவர், அவசியம் நினைவுக்கு வருவார்.

ஆனால், கொமேனியை நினைவுகூர இதைக்காட்டிலும் வலுவான காரணங்களும் சம்பவங்களும் உண்டு. உலகின் இரண்டாவது பெரிய மதமான இஸ்லாத்துக்குள் இருக்கும் இரண்டு பிரிவுகளுள், ஷியா பிரிவினைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் ஏழைகள். அதிகக் கல்வியறிவு இல்லாதவர்கள். பல இஸ்லாமிய நாடுகளில், சன்னி பிரிவினரால் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வந்தவர்கள். எதிர்த்துக் குரல்கொடுக்கத் தெரியாமல் பல நூற்றாண்டுகளாக அதிகார வர்க்கத்தினருக்கும் இஸ்லாத்தின் மாற்றுப் பிரிவினருக்கும் அடங்கியே போய்க்கொண்டிருந்தார்கள். எங்காவது ஷியாக்கள் மொத்தமாக, கணிசமாக இருக்கிறார்கள் என்று தெரிந்தால், அப்படியே சுற்றி வளைத்து இனப்படுகொலை செய்வது என்பது ஈராக்கிலும் பல்வேறு ஆப்பிரிக்க தேசங்களிலும் நடைமுறையில் இருந்திருக்கிறது.

ஈராக்குக்குப் பக்கத்து நாடான ஈரானில், ஷியாக்கள் அதிகம். மெஜாரிட்டிகளாக இருந்தும் கொமேனியின் வருகைக்கு முன்னர், சுமார் முப்பத்தெட்டு ஆண்டுகாலம் (1941 முதல் 1979 வரை) மன்னர் ஷா முஹம்மது ரெஸா பாலவியின் (Shah Mohammad Reza Pahlavi) சகிக்கமுடியாத முடியாட்சியில் அவஸ்தைப்பட்டுக்கொண்டு இருந்தார்கள். கொமேனியின் எழுச்சியும் அதன் விளைவான மக்கள் புரட்சியும்தான், ஷியாக்களுக்கு அங்கே ஓர் அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்தது.

கொமேனி ஒரு ஷியா முஸ்லிம். ஈரானில் மன்னராட்சியை ஒழித்து, மக்களாட்சியைக் கொண்டுவந்ததாகச் சொல்லிக்கொண்டாலும், அவர் நடத்தியது சர்வாதிகார ஆட்சிதான். ஆனாலும், ஷரியத்தை அடியொற்றிய ஆட்சி என்றபடியால், ஈரான் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அமெரிக்க எதிர்ப்பு என்னும் லாலிபாப் அவர் கையில் இருந்தபடியால், கொஞ்சம் சாகச உணர்வுடனும் தங்கள் அதிபரை அவர்கள் வழிபட ஆரம்பித்தார்கள். ஒரு மதத் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் கொமேனி, ஈரான் மக்களிடையே பெற்ற செல்வாக்கு மிக அதிகம். கண்ணை மூடிக்கொண்டு அவரது வீர உரைகளைக் கேட்பதில், மக்களுக்கு அப்போது அப்படியொரு ஆர்வம். ஒருங்கிணைந்து செயல்பட்டால் ஆட்சி மாற்றம், அதிகார மாற்றம் சாத்தியமே என்பதுதான், கொமேனியின் புரட்சி சொல்லும் ஒருவரிப் பாடம்.

1963_ம் ஆண்டு ஈரானிய மன்னருக்கு எதிராகக் குரல் கொடுத்த குற்றத்துக்காக, கொமேனிக்கு

எட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்த வருஷம், அவர் வெளியே வந்ததும் மீண்டும் அதே திருப்பணியை ஆரம்பித்து வைத்தார். இம்முறை அவருக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டது. ஆனால், அதற்குள் அவருக்கு மக்கள் செல்வாக்கு மிக அதிகமாகிவிட்டபடியால், அவரைக் கொன்றால் ஈரானில் கலவரம் நடக்கும் என்று நினைத்து நாடு கடத்திவிட்டார்கள்.

முதலில் துருக்கிக்குப் போனார். பிறகு, கொஞ்சகாலம் கழித்து அங்கிருந்து ஈராக்குக்கு இடம் பெயர்ந்தார். ஈராக்கில் சதாம் உசேன் அப்போது துணை அதிபராக இருந்தார். அவருக்கு கொமேனியை வைத்துக்கொள்வது சரிப்படாத காரணத்தால், அங்கிருந்து துரத்தியடிக்க, கொமேனி பிரான்ஸுக்குப் போனார். ஈரானிய மன்னர் ஷா, அமெரிக்க, பிரான்ஸ், பிரிட்டன்நேசர் என்கிறபடியால், பிரான்ஸிலேயே கொமேனியைக் கொன்றுவிடலாமா? என்று பிரான்ஸ் உளவுத்துறை அதிகாரிகள் கேட்டார்கள். 'ஐயோ, வேண்டாம், அவர் தியாகியாகிவிடுவார்' என்று மன்னர் ஷா மறுத்துவிட்டதுதான், கொமேனியின் வாழ்க்கையில் இரண்டாம் பாகத் தொடக்கம். அங்கிருந்தபடியே, ஈரான் மக்களை உசுப்பிவிட்டு, ஒரு புரட்சிக்குத் தயார் செய்து, அதில் வென்றும் காட்டியது தனி வரலாறு.

ஆகவே, பாதிக்கப்பட்ட, அடிமை வாழ்க்கையில் உழலும் மக்கள் அனைவருக்கும் அவரது வாழ்வும் புரட்சியும் மிகப்பெரிய விஷயங்களாக இருந்தன. அப்பாஸ் அல் மூசாவியை கொமேனி இந்த வகையில் கவர்ந்தது வியப்பல்ல. ஆனால், அவர் மற்றவர்களைப் போல வழிபாட்டு நிலைக்கு இறங்கிவிடாமல், கொமேனியைப் போலத் தாமும் மதக்கல்வியைப் பூரணமாகக் கற்கவேண்டும் என்று நினைத்தார். கொமேனியின் நெஞ்சுரத்தைப் பெறவேண்டும் என்று விரும்பினார். கொமேனியைப் போலவே, லெபனான் ஷியாக்களுக்கு ஒரு விடிவுகாலத்தைக் கொண்டுவரத் தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தார்.

பதினைந்திலிருந்து இருபத்தைந்து வயது வரை மூசாவிக்கு இதே எண்ணம்தான். அவரது பேச்சு மூச்செல்லாம் இதைப்பற்றித்தான். தனக்கிருந்த மிகக் குறைந்தபட்ச வசதிகளைக் கொண்டே, தன் உலக அறிவையும் மதக்கல்வியையும் விஸ்தரித்துக்கொண்டார். எங்கு, யாரிடம், என்ன புத்தகம் இருப்பதாகக் கேள்விப்பட்டாலும் மைல் கணக்கில் நடந்தே சென்று வாங்கிப் படித்துவிட்டு வருவார். அபாரமான நினைவாற்றல், ஒருமுறை படித்தால் சாகும் வரை மறக்காத இயல்பு அவருக்கு இருந்தது. குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் (முகம்மது நபியின் போதனைகள்) கரைகண்டவர்.

லெபனானுக்கு கொமேனிபோல் ஒரு தலைவர் கிடைக்கமாட்டாரா என்ற எண்ணத்துடன்தான், அவர் 1978_ம் ஆண்டு மீண்டும் லெபனானுக்குத் திரும்பினார். அப்படியொரு புரட்சிக்கு அங்கும் விதை ஊன்றப்பட்டு, அதற்குத் தாமே தலைமையும் தாங்குவோம் என்று கண்டிப்பாக அப்போது அவர் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

ஆனால், காலம் அவருக்கு உதவி செய்தது. மூசாவியைப் போலவே உள்ளக் குமுறலும் செயல் வேகமும் கொண்ட வேறு பலர் லெபனானில் அப்போது மூலைக்கு ஒருவராக முளைத்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஒருவரை ஒருவர் தெரியாது, அல்லது கொஞ்சமே கொஞ்சம் தெரியும் அல்லது பார்த்தால் புன்னகை செய்யும் அளவுக்கு மட்டுமே பரிச்சயம்.

பிள்ளையார் சுழி போட ஒரு நபர் மட்டுமே வேண்டியிருந்தது. மூசாவி முதன் முதலில் வெளியே வந்து, ஷியாக்களை ஒருங்கிணையும்படி குரல் கொடுத்தபோது, சொல்லிவைத்தமாதிரி, வீரமும் விடுதலை வேட்கையும்மிக்க லெபனானிய ஷியா இளைஞர்கள் அவர் பின்னால் திரண்டு வர ஆரம்பித்துவிட்டார்கள். அப்படி வந்தவர்களுள் ஒருவர்தான் ஹஸன் நஸரல்லா.

மூசாவி, ஈராக்கிலிருந்து லெபனானுக்குத் திரும்பி, ஒரு சிறு மதப்பள்ளிக்கூடத்தின் ஆசிரியராக உத்தியோகம் பார்க்க ஆரம்பித்து, ஒன்றிரண்டு வருடங்கள் கழிந்த பிறகு, அவரைப் பார்க்க ஓர் இளைஞர் வந்தார். தன் பெயர் நஸரல்லா என்று சொல்லி அறிமுகப்படுத்திக்கொண்டார். வந்தவர்

கையில், ஒரு சிபாரிசுக் கடிதம் இருந்தது. லெபனானின் அந்நாளைய மத சூப்பர் ஸ்டாராக விளங்கிய இமாம் மூசா அல் சதர் என்பவரைப் பார்க்கவும், அவரது ஏற்பாட்டின்படி நடக்கவிருந்த ஒரு மாபெரும் இஸ்லாமியக் கருத்தரங்கில் பங்குபெறவும் அனுமதி கோரிய சிபாரிசுக் கடிதம்.

ஈராக்கில் இருக்கும் யாரோ ஒரு பெரிய மனுஷன் கொடுத்தனுப்பியிருந்த கடிதம் அது. தீவிர மதப்பற்று மிக்க ஹஸன், மூசாவை எங்கே, எப்படிப் பார்ப்பது, யார் மூலம் அணுகுவது என்பதுகூடத் தெரியாமல் சுற்றிக்கொண்டிருந்தபோது, வழியில் எதிர்ப்பட்ட யாரோ ஒரு சிலர், 'நீங்கள் நேரடியாக இமாமைப் போய்ப் பார்ப்பதென்பது நடக்காத காரியம். அப்பாஸ் அல் மூசாவியைப் போய்ப் பாருங்கள். அவர் மனம் வைத்தால், நீங்கள் இமாமைச் சந்திக்கமுடியும்' என்று சொல்லியனுப்பியிருந்தார்கள்.

மிகச் சாதாரண தள்ளுவண்டி பழ வியாபாரி ஒருவரின் மகனாகப் பிறந்து, கஷ்டப்பட்டுப் படித்து (இவரும் மூசாவியைப் போலவே ஈராக் சென்று படித்தவர்) முன்னேறப் பாடுபட்டுக்கொண்டிருந்தவர் நஸரல்லா. மூசாவியைப் பார்க்க வந்த கணத்தில் அவரது வாழ்க்கையே திசைமாறிவிட்டது.

மூசாவியின் எளிமையும் தோழமையும், 'அட, நானும் இந்த ஊர்க்காரன்தான்யா' என்கிற உற்சாகமும் நஸரல்லாவுக்குப் பிடித்துப்போனது. தவிரவும் தன்னைவிட எட்டு வயது சீனியர் என்றாலும், மூசாவி தனக்குச் சமவயதுத் தோழன் போலவும், சமயத்தில் தன்னைக் காட்டிலும் வயது குறைவானவராகவும் தோன்றியது, நஸரல்லாவுக்கு வியப்பாக இருந்தது. அவரது கல்வி ஞானமும் மதப்பற்றும்தான் நஸரல்லாவை முதன்மையாகக் கவர்ந்த விஷயங்கள். அத்தனை படித்த மனிதர்கள், பொதுவாக இவ்வளவு தன்னடக்கமுடன் நடந்துகொள்ளமாட்டார்கள் என்று அவர் நினைத்தார். மேலும், லெபனான் ஷியா சமூகத்தினரிடையேயும் இமாம் மூசா அல் சதர் மற்றும் அவரைச் சுற்றியிருந்த பண்டிதர்கள் மத்தியிலும் மூசாவிக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் நஸரல்லாவுக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தின.

உட்கார்ந்து பேசப் பேச, இனி தன் வாழ்க்கை ஒருபோதும் மூசாவியைவிட்டுப் பிரிக்கமுடியாதபடிதான் அமையும் என்று அவருக்கு உறுதியாகத் தோன்றியது.

அடிப்படையில் நஸரல்லாவுக்கும், இஸ்ரேலின் லெபனான் ஆக்கிரமிப்புத் தொடர்பாக விமர்சனங்களும் கோபங்களும் இருந்தன. இயல்பிலேயே அவர் கொஞ்சம் தீவிரர். பேச்சுவார்த்தைகளில் அதிகம் நம்பிக்கை இல்லாதவர். அடிக்கு அடி, உதைக்கு உதை என்கிற சித்தாந்தத்தில் மிகுந்த விருப்பம் கொண்டவர். துடிப்பும் வேகமும் மிக்க நஸரல்லாதான் மூசாவியின் முதல் ஆயுதம். நண்பர்களாகத்தான் பழகினார்கள் என்றாலும், மூசாவி பல விதங்களில் நஸரல்லாவுக்கு ஆசிரியராகவும் விளங்கினார். சித்தாந்த ரீதியில் நஸரல்லாவின் சிந்தனைப்போக்கை ஒழுங்குபடுத்தியவர் மூசாவிதான்.

ஆகவே, ஓர் இயக்கமாக லெபனானிய ஷியாக்கள் திரளவேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கு வலுப்பட்டபோது, அந்த இயக்கத்தின் அரசியல் குருவாக மூசாவியும், ராணுவ வாத்தியாராக நஸரல்லாவும் அமைந்தது இயல்பான விஷயங்களே. (நஸரல்லா, லெபனானுக்குத் திரும்பிவந்த சூட்டிலேயே பல்வேறு முன்னாள் லெபனான் ராணுவ வீரர்களிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர். சில சிறு போராளிக் குழுக்களுடனும் அவருக்குத் தொடர்பு இருந்திருக்கிறது.)

ஹிஸ்புல்லா ஆரம்பிக்கப்பட்டபோது, மூசாவி அதன் முதல் செகரெட்டரி ஜெனரல் என்று அறிவிக்கப்பட்டார். நஸரல்லா, அவரது வலதுகரமாக இருந்தார். 1992_ல் மூசாவி இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்டவுடன் நஸரல்லா ஹிஸ்புல்லாவின் ஜெனரல் செகரட்டரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்றுவரை ஹிஸ்புல்லா ஒரு திடமான, அழிக்க முடியாத ராணுவ அமைப்பாக இருப்பதற்கு நஸரல்லாதான் காரணம்.

இரண்டு பேர் ஆச்சா? மூன்றாவது நபர், ஷேக் முஹம்மது ஹுஸைன் ஃபத்லல்லா (Sheik Muhammad Husayn Fadlallah).

ஹிஸ்புல்லாவினரின் ஆன்மிகத் தலைவராகக் கருதப்படும் ஷேக் முஹம்மது ஹுஸைன் ஃபத்லல்லா, 1935_ம் ஆண்டு ஈராக்கில் உள்ள நஜஃப் என்கிற நகரத்தில் பிறந்தவர்.

அவர் பிறந்தது ஈராக் என்றாலும், அவரது தந்தை, தாய்வழியில் அத்தனை பேருமே லெபனானைச் சேர்ந்தவர்கள். ஃபத்லல்லாவின் தந்தை அயாதுல்லா அப்துல் ரவூஃப் ஃபத்லல்லா அப்போது நஜஃபில் பிரசித்தி பெற்ற உலமா (மார்க்க அறிஞர்).

ஃபத்லல்லா, நஜஃபில்தான் தனது ஆரம்பக் கல்வி முதல் ஆசிரியப் பணிக் காலம் வரை கழித்தார். உலகப் புகழ்பெற்ற இஸ்லாமிய மார்க்க அறிஞரும் இஸ்லாமிய நோக்கில் மார்க்ஸியத்தைக் கிழி கிழி என்று கிழித்து, சர்வதேச அளவில் பரபரப்பேற்படுத்தியவருமான முஹம்மது பக்கீர் அல் சதர் (Muhammad Baqir alSadr – மார்க்ஸியப் பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றாக, இவர் முன்வைத்த இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைகள் அடங்கிய 'இக்திஸாதுனா' (Iqtisaduna) என்கிற நூல் மிகவும் புகழ்பெற்றது.) இவரது பள்ளித்தோழர். பின்னாளில் ஃபத்லல்லாவின் மதக்கல்வியை அரசியல் மற்றும் சமூகத் தேவைகளுக்கான கருவியாக மாற்றியவரும் அவர்தான்.

1966_ல் நஜஃப் நகரத்து உலமாக்கள் ஃபத்லல்லாவின் கல்வி முடிந்துவிட்டது என்று அறிவித்து, அவரை ஒரு வழிநடத்தும் ஆசிரியராக லெபனானுக்கு அனுப்பி வைத்தார்கள்.

பெய்ரூத்தின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான 'நபா' என்கிற இடத்துக்குச் சென்ற ஃபத்லல்லா, முதன் முதலில் அங்கே சில மதப்பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் மக்கள் மையங்களையும் (Community centers) தொடங்கிவைத்து வேலையை ஆரம்பித்தார். எல்லாம் சுமுகமாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால், 1975_ம் ஆண்டு லெபனானில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டபோது, நபா நகரையே அங்குள்ள கிறிஸ்துவர்கள் சூறையாடி, துவம்சம் செய்துவிட, ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அகதிகளாகத் தெற்கு லெபனான் கிராமங்களை நோக்கி இடம் பெயர நேரிட்டது.

எழுபதுகளின் இறுதியில், முன்னர் பார்த்த ஈரான் புரட்சி, அயாதுல்லா கொமேனியின் எழுச்சிச் சம்பவங்கள் நடைபெற, அதனால் ஈர்க்கப்பட்டு லெபனான் ஷியாக்களை இயக்க ரீதியில் ஒன்று திரட்டவேண்டிய அவசியத்தை ஃபத்லல்லா உணர்ந்தார். இதே சிந்தனையுடன் திரிந்துகொண்டிருந்த அப்பாஸ் அல் மூசாவி, நஸரல்லா இருவரும் ஃபத்லல்லாவைச் சந்திக்க, ஹிஸ்புல்லாவின் அதிகாரபூர்வ ஆன்மிகத் தலைவராக ஃபத்லல்லா ஆகிப்போனார்